# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை 07.11.2025 கதிர் 363









# பொருளாதார நெருக்கடி இங்கு மீண்டும் ஏற்படாது!

## வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஜனாதிபதி உறுதி

கொழும்பு, நவ. 07

"நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொருளாதாரம் ஸ்தீரத்தன்மையில் இருக்கின்றது." - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தை இன்று பிற்பகல் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தேசிய வருமானம், அரச நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம். உலக நாடுகளுக்கு இடையில் மோதல் இடம்பெற்ற போதிலும் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் எவ்வித பாதிப்பு ஏற்படவில்லை இந்த வருட இறுதிக்குள் அந்திய செலவாணி 7 வீதமாக அதிகரிக்கும் .

7➤



## தமிழர்களை ஏமாற்றிய அநுர பாதீடு குறித்து கடும் தீர்மானம்

### தமிழரசுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, நவ. 07

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது. எனவே, வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எமது கட்சியால் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

7➤

## கோர விபத்தில் இளைஞர் மரணம்



வவுனியா, நவ. 07

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், யாழ். வடமராட்சி, கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

7➤

## முல்லைத்தீவில் கோடரியால் மனைவியைத் தாக்கிவிட்டு கணவர் உயிர்மாய்ப்பு!

முல்லைத்தீவு, நவ. 07

முல்லைத்தீவு, குமுழமுனைப் பகுதியில் கணவர் கோடாரியால் மனைவியைத் தாக்கிவிட்டு, கிணற்றில் குதித்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் வசித்து வந்த 75 வயதான கணவருக்கும் 73 வயதுடைய மனைவிக்கும் இடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டிருந்தது. கணவனுக்கு அண்மைய நாட்களாக மனநிலை பாதிப்பு ஏற்பட்டிருந்தது என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை இரவு உணவருந்தி நித்திரைக்குச் சென்ற கணவர், இன்று வெள்ளிக்கிழமை காலை கோடாரியைக் கொண்டு மனைவியின் தலையில் தாக்கினார்.

அதன் பின்னர், அந்தக் கணவர் வீட்டின் பின்புறத்தில் உள்ள கிணற்றில் குதித்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பண்டிகைக் காலங்களில் சுற்றுலா செல்லவுள்ளோருக்கு அதிஉச்ச எச்சரிக்கை! நடப்பாண்டில் பறிபோன பல உயிர்கள்

கொழும்பு, நவ.7

நாடளாவிய ரீதியில் இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 2210 வீதி விபத்துகளில் சிக்கி 2343 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

நேற்று பொலிஸ் ஊடகப் பிரிவில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பண்டிகை காலங்களின் போது வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்களுக்காக செல்வோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

பாடசாலை விடுமுறை என்பதாலும், பல்வேறு நிகழ்வுகளில்பங்கேற்பதற்காகவும்பெருமளவானோர் வெளிமாவட்டங்களுக்கு செல்கின்றனர்.

அவ்வாறு குடும்பங்களுடன் வெளியிடங்களுக்குச் செல்வோர் வாகனங்களின் தன்மை, வானத்தின் இயந்திரம் தொடர்பிலும் அவதானம் செலுத்துவது அவசியம். அந்தவகையில் இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான 2210 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அவ்வாறான விபத்துகளில் சிக்கி 2343 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு படுகாயம் ஏற்படக்கூடிய வகையில் 4360 விபத்துக்களும் பதிவாகியுள்ளன.

எதிர்வரும் பண்டிகை காலங்களில் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

கவனயீனமாகவும், மது போதையுடனும் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இதேவேளை இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை முழுவதும் சுமார் 260 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பல குடும்பங்களுக்கு இந்த உயிரிழப்புகள் பெரும் சோகத்தை அளித்தாலும், உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் மற்றும் மீட்பு முயற்சிகள் காரணமாக, அதே காலகட்டத்தில் 195 உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளன.

காப்பற்றப்பட்டவர்களில் 135 பேர் இலங்கையர்கள் என்றும் 60 பேர் வெளிநாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நேற்றைய தினம் சிலாபம் தெதுறு ஓயாவில் நீராடிக் கொண்டிருந்தபோது, கிரிபத்கொட-மாகொலையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் நீரில் மூழ்கிய உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பாடசாலை விடுமுறைகள் மற்றும் பண்டிகைக் காலங்களில் நீர்நிலைகளுக்கு அருகில் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அதிஉச்ச எச்சரிக்கையுடன் செயற்படுமாறு, அவர் பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# மன்னார் வைத்தியசாலையில் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் நகரசபை சுகாதாரக் குழு அதிரடி நடவடிக்கை!





மன்னார் பொது வைத்தியசாலை சூழல் மற்றும் பொது வைத்தியசாலையின் கீழ் குத்தகை அடிப்படையில் இயங்கும் சிற்றூண்டி சாலையில் தொடர்சியாக பல்வேறு சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மன்னார் நகரசபை சுகாதார குழு உறுப்பினர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் தலைமையில் வைத்தியசாலையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக மனித கழிவுகள் சிற்றுண்டிசாலை வளாகத்தில் காணப்பட்டமை,கழிவு நீர்,மலக்கழிவுகள் திறந்த பகுதியில் விடப்பட்டமை,அதிகளவான இலையான்கள்,துர்நாற்றம்,ஒழுங்கற்ற கழிவுகற்றல், நுளம்பு பெருக்கத்துக்கு சாதகமான சூழல், கழிவு நீர் வாய்கால்களில் புழுக்கள், உணவு பொருட்கள் ஒழுங்கான முறையில் களஞ்சியப்படுத்தப்படாமை,அழுக்கான சமையலறை,கழிப்பறை தொட்டிகள் மூடப்படாமை உள்ளடங்களாக பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்டன.

இவ்வாறான நிலையில் குறித்த சிற்றுண்டிசாலைக்கு எதிராக வழக்கு தாக்கள் செய்யப்படவுள்ளதுடன் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் கடிதம் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக நகரசபை சுகாதாரக் குழு தெரிவித்துள்ளது. (ஐ)



# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபட்ட சட்ட வைத்திய அதிகாரியை நீக்கியமை தொடர்பில் ஆராயப்படும்! – ஸ்ரீ பவானந்தராஜா எம்.பி!



செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் இரு சட்ட வைத்திய அதிகாரிகள் கடமையில் இருந்த நிலையில் ஒருவர் நீக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அரசாங்கம் தங்கு தடை இன்றி நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் குறித்த புதைகுழி அகழ்வு பணியில் இரு சட்ட வைத்திய அதிகாரிகள் கடமையாற்றிய நிலையில் ஒருவரை அதிலிருந்து நீக்கி உள்ளனர்.

நாடாளுமன்ற சுகாதார மேம்பாட்டு உயர்மட்ட குழுவில் நான் பங்கு பற்றிய நிலையில் செம்மணி அகழ்வில் மாதிரிகளை சேகரிப்பது ஆராய்வது தொடர்பில் மேலும் ஒரு சட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தேன்.

அதன் அடிப்படையில் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு மேலதிகமாக யாழ். தீவகத்தில் கடமையாற்றும் சட்ட வைத்திய அதிகாரி அகழ்வுப் பணிகளில் கடமையாற்றினார்.

குறித்த வைத்தியர் மூன்று மாதங்கள் மட்டுமே கடமையாற்றியதாக அறியக் கிடைக்கும் நிலையில் குறித்த சட்ட வைத்திய அதிகாரி நீக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி மீண்டும் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# அரசுக்கு எதிரான பேரணி குறித்து ராஜித மழுப்பல்



நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்பது தொடர்பில் தான் இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி பேரணிக்கு ஆதரவை வழங்கும் முடிவை கட்சி எடுத்திருந்தாலும், அது பற்றி தான் இன்னமும் பரிசீலித்து வருவதாகவும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “தேசிய மக்கள் சக்தி அரசு மீது நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்து வருகின்றனர்.

எனவே, எதிரணி வசம் சிறந்த மாற்றுத் தேர்வு இருக்க வேண்டும். மாறாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுடன் பயணிக்கத் தொடங்கினால் அது பிரச்சினைக்கே வழிவகுக்க வேண்டும்.

மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான பொது எதிரணியொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.” என்றும் தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்பது தொடர்பில் தான் ,ன்னும் ,றுதி முடிவை எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி பேரணிக்கு ஆதரவை வழங்கும் முடிவை கட்சி எடுத்திருந்தாலும், அது பற்றி தான் ,ன்னமும் பரிசீலித்து வருவதாகவும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “தேசிய மக்கள் சக்தி அரசு மீது நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்து வருகின்றனர்.

எனவே, எதிரணி வசம் சிறந்த மாற்றுத் தேர்வு ,ருக்க வேண்டும். மாறாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுடன் பயணிக்கத் தொடங்கினால் அது பிரச்சினைக்கே வழிவகுக்க வேண்டும்.

மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான பொது எதிரணியொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.” என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)



# தீவிர பாதுகாப்பில் நாடாளுமன்றம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர்

நாடாளுமன்றத்தில் இன்றைய தினம் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆடை மாற்றும் அறைகள் உட்பட நாடாளுமன்ற வளாகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் நேற்றைய தினம் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இராணுவத்தினராலும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினராலும் கடுமையாக ஆய்வு செய்யப்பட்டன.

நாடாளுமன்ற காட்சியகம் இன்று சிறப்பு விருந்தினர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கும் நிகழ்வைக் காண உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விருந்தினர்கள் பலர் இன்று நாடாளுமன்றத்திற்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்காக துரித இலக்கம் அறிமுகம்

கொழும்பு, நவ.7

பாடசாலை கல்விக்குப் பிறகு தொழிற் கல்விக்குச்செல்வதற்கு மாணவர்களுக்குத் தேவையான தகவல்களைச் சரியாகவும் திறமையாகவும் வழங்குவதை நோக்கமாக கொண்டு ‘1966’ தொழிற்கல்வி துரித அழைப்பு **(Hotline)** சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டவில் உள்ள ‘நிபுணதா பியச’ வளாகத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவின் தலைமையில் இது ஆரம்பிக்கப்பட்டது.

‘1966’ அவசர அழைப்பு சேவை மூலம், தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு தகவலையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் திறமையான சேவைக்காக, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் **(AI)** மூலம் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்ப அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட **‘AI Chat BOT’** இற்குள் பிரவேசிக்கவும் முடியும். இதன் மூலம் தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும்.



புதிய உருமாற்றக் கல்விச் செயல்முறைக்கு இணங்க, புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் கற்கப்படும் தொழிற்கல்வியை மேலும் தொடர்வதற்கு நவீன தொழில்நுட்பத்துடன் இணைவதன் முக்கியத்துவத்தை பிரதமர் ஹரிணி இதன்போது விளக்கினார்.

மாற்றப்பட வேண்டிய இடங்களை எந்தத் தயக்கமும் இன்றி மாற்றி, தொழில் கல்விக் கட்டமைப்பினுள் நாளை உலக வேலைவாய்ப்புகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை தரத்துடன் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவகே உட்பட தொழிற்கல்வி அமைச்சின் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ)

# வங்கக்கடலில் அடுத்தடுத்து உருவாகவுள்ள காற்றழுத்தம் 14 ஆம் திகதிக்கு பின்னர் வடகிழக்கில் மழை தீவிரம்!

வங்கக்கடலில் அடுத்தடுத்து 2 காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 14 ஆம் திகதி தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக உள்ளது.

அதற்கு மறுநாள் முதல் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிலிப்பைன்ஸில் இந்த ஆண்டு தாக்கிய மிக மோசமான ‘கல்மேகி’ (முயடஅயநபை) சூறாவளியினால் 114 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்தநிலையில் மற்றொரு சூறாவளியான ஃபோங்–வோங், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிலிப்பைன்ஸைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புயல் தற்போது தென்கிழக்கு திசையில் வேகமாக நகர்ந்து வருகிறது. எனவே பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல் முறியடிப்பு: ஆயுதம் ஏந்திய 3 பேர் கைது



காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதலை போலீசார் முறியடித்தனர். தல்கேட்டில் ஆயுதம் ஏந்திய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக நம் ராணுவம், 'ஆப்பரேஷன் சிந்துார்' நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் பாக்., பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. மேலும், பாக்., ராணுவ விமானப்படை தளங்களும் பெருமளவில் சேதமடைந்தன. இந்நிலையில், நம் ராணுவத்துக்கு பதிலடி கொடுக்க, லஷ்கர் - இ - தொய்பா மற்றும் ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் ஜமாத் - இ - இஸ்லாமி, ஹிஜ்புல் முஜாஹிதீன் மற்றும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., அதிகாரிகள் பங்கேற்ற உயர் மட்ட கூட்டம் கடந்த மாதம் நடந்ததாக தகவல் கிடைத்துள்ளது. இந்த கூட்டத்தின் போது, இந்திய பாதுகாப்பு படைகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பதிலடி கொடுக்கும் வகையில் தாக்குதலை நடத்த வேண்டும் என, பயங்கரவாதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக தெரிகிறது.

இதன் காரணமாக லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாதிகள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள தங்களது ஆதரவாளர்களை அடையாளம் காணும் பணியில் இறங்கி உள்ளனர். மேலும், போதை பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல்கள் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான நிதியை திரட்டவும் முடிவு எடுத்திருக்கின்றனர். வழக்கமாக குளிர்காலங்களில் எல்லையில் ஊடுருவல் சம்பவங்கள் குறையும். ஆனால், இந்த முறை தாக்குதலை தீவிரப்படுத்தும் நோக்கில் ஊடுருவல்களை அதிகப்படுத்தவும் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதனால், எல்லைப் பகுதியில் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் காஷ்மீரில் பெரிய பயங்கரவாத தாக்குதலை போலீசார் முறியடித்தனர். தல்கேட்டில் ஆயுதம் ஏந்திய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மூன்று நபர்கள் கூலிபோரா கன்யாரைச் சேர்ந்த ஷா முதாயிப் மற்றும் கம்ரான் ஹசன் ஷா மற்றும் உத்தரபிரதேசத்தின் மீரட்டைச் சேர்ந்த முகமது நதீம் என அடையாளம் காணப் பட்டுள்ளனர். வழக்கமான வாகன சோதனைகளின் போது கைது செய்யப் பட்டனர் என போலீசார் தெரிவித்தனர். (ஐ)

# ஓட்டு வங்கிக்காக ராமரை வெறுக்கின்றனர் ராகுல், லாலு மீது பிரதமர் மோடி பாய்ச்சல்



"பீஹாரில், ஓட்டு வங்கிக்காக தான் ராகுலும், லாலு குடும்பத்தினரும் ராமரை வெறுக்கின்றனர்," என, பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீஹாரில், 121 சட்டசபை தொகுதிகளுக்கு முதல்கட்ட தேர்தல் நேற்று முடிந்தது.

இறுதி கட்ட தேர்தல் வரும் 11ம் தேதி நடக்க உள்ளது. 20 மாவட்டங்களில் உள்ள, 122 தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஓட்டளிக்க உள்ளனர்.

அதிவிரைவு சாலை அதற்கான பிரசாரத்தில் பிரதமர் மோடி தீவிரமாக ஈடுபட்டுள்ளார். பஹல்பூர் மற்றும் அராரியா மாவட்டங்களில் நேற்று அடுத்தடுத்து பிரசாரம் செய்த பிரதமர் மோடி பேசியதாவது:

பீஹாரில், 15 ஆண்டுகள் நடந்த காட்டாட்சியால் மாநிலத்தில் வளர்ச்சி பணிகள் எதுவும் நடக்கவில்லை. நெடுஞ்சாலை, பாலம், உயர்கல்வி நிறுவனங்கள் எதுவும் அமையவில்லை. முதல்வர் நிதிஷ்குமார் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அதை மாற்றியது. இன்று அதிவிரைவு சாலைகள், பாலங்கள், நான்கு மத்திய பல்கலைக்கழகங்கள் உள்ளன.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு ஊடுருவல்காரரையும் விரட்டியடிக்க நாங்கள் முயற்சிக்கிறோம். ஆனால் காங்கிரஸ்– – ராஷ்ட்ரீய ஜனதா தளம் அவர்களுக்கு பாதுகாப்பு தருகிறது. ஆட்சிக்கு வந்தால் அவர்களை பின்வாசல் வழியாக மாநிலத்திற்குள் நுழையவிடுவர். இது, நாட்டு மக்களுக்கே பாதிப்பு.

காங்கிரசில் குடும்ப பெயரை வைத்து அரசியலில் இருப்பவர்கள், சத் பூஜையை நாடகம் என்கின்றனர். காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரீய ஜனதா தளத்தினர் அயோத்தி ராமர் கோவிலுக்கு தான் செல்வதில்லை என்றால், அங்கு உள்ள நிஷாத் ராஜ், சபரி மாதா, வால்மீகி சன்னிதிகளுக்கு கூட செல்வதில்லை. இது அவர்களிடம் இருக்கும் தலித், பிற்படுத்தப்பட்டோர் வெறுப்பை காட்டுகிறது.

சமூக நீதி ஓட்டு வங்கிக்காக ராகுலும், லாலு குடும்பத்தினரும் ராமரை வெறுக்கின்றனர். இந்த தேர்தலில் பீஹார் இளைஞர்கள், முதியோர், குறிப்பாக பெண்கள் உற்சாகமாக ஓட்டளிக்கின்றனர். ஒரு ஓட்டு சமூக நீதியை உருவாக்கியது அதே ஓட்டு காட்டாட்சியை விரட்டியது. மீண்டும் காட்டாட்சி வராமல் தடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

# தொழில்நுட்பக்கோளாறு 100க்கும் மேற்பட்ட விமான சேவை பாதிப்பு



விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, டில்லி விமான நிலையத்தில் 100க்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் கூறியதாவது விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையத்தின் சாப்ட்வேரில் கோளாறு ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்யும் பணியில் இன்ஜினியர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக, டில்லி விமான நிலையத்தில் இருந்து புறப்படும் மற்றும் பிற பகுதிகளில் இருந்து வந்து சேரும் 100க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் இந்த அசவுகரியத்திற்கு மன்னித்து விடுங்கள். விரைவில் கோளாறு சரி செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட விமான பயண நேர அட்டவணைகள் வெளியிடப்படும். எனவே, பயணிகள் அனைவரும் தங்களின் விமானப்பயணம் குறித்த விபரங்களை அறிய தொடர்பில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது, என தெரிவித்தார்.

இதனிடையே, ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் டில்லியில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அனைத்து விமானங்களின் புறப்பாடுகள், வருகைகள் தாமதமாகியுள்ளன. பயணிகள், ளிஉைநதநவ. உழஅ்ஃசூளவயவரளமூலம்தங்கள்விமானப்பயணம் குறித்த சரிபார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ரூ.10,380 கோடி அள்ளி கொடுத்த பெரும் செல்வந்தர்கள் தினசரி ரூ.7.40 கோடி தந்து ஷிவ் நாடார் முதலிடம்

நாட்டின் பெரும் செல்வந்தர்களிடம் நற்பணிகளுக்காக கொடுக்கும் மனம், முன் எப்போதும் இல்லாத அளவு அதிகரித்து இருக்கிறது.

கடந்த நிதியாண்டில் மொத்தம் 10,380 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளனர். /ஹுருன் இந்தியா நிறுவனத்தின் 'எடெல்கிவ் /ஹுருன் இந்தியா பிலான்தெரபி' தரவரிசை பட்டியலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 7.40 கோடி ரூபாய் நன்கொடை வழங்கி, எச்.சி.எல்., நிறுவனத்தின் ஷிவ் நாடார் இந்த பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.



ஷிவ் நாடார்



ரோஹிணி நிலேகனி

இவர், மொத்தம் 2,708 கோடி ரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளார். இந்த பட்டியலில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்கு முறை, ஷிவ் நாடாரே முதலிடம் பிடித்துள்ளார்.

அதிக நன்கொடை வழங்கிய நிறுவனமாக இன்போசிஸ் விளங்குகிறது.

இதன் நிறுவனர்கள், குடும்ப உறுப்பினர்கள் மொத்தம் 850 கோடி ரூபாய் நன்கொடை கொடுத்துள்ளனர்.

ஜெரோதாவின் நிகில் காமத் தொடர்ந்து நான்காவது ஆண்டாக இளம் நன்கொடையாளராக நீடிக்கிறார்.

டாப் 25 நன்கொடையாளர்கள் பட்டியலில் இடம்பெறுவதற்கான வரம்பு, 70 கோடி ரூபாயாக அதிகரிப்பு: கடந்த 2014ஐ விட 180 சதவீதம் உயர்வு.

டாப் 25 நன்கொடையாளர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் 50,000 கோடி ரூபாய் வழங்கினர். இது தினசரி 46 கோடி ரூபாய்.

கடந்த நிதியாண்டில், 204 கோடி ரூபாய் வழங்கிய ரோஹிணி நிலேகனி, பெண் நன்கொடையாளரில் முதலிடம் பிடித்துள்ளார். 65 வயதாகும் இவர், அக் ஷரா பவுண்டேஷன் தலைவராக உள்ளார்.

துவக்க கல்வியில் இந்த அமைப்பு கவனம் செலுத்துகிறது. அர்க்யம் என்ற அறக்கட்டளை வாயிலாகவும் குடிநீர், கழிப்பறை பிரச்னைகளுக்கு ரோஹிணி தீர்வு கண்டு வருகிறார். ஆதார் அமைப்பின் தலைவராக இருந்த நந்தன் நிலேகனியின் மனைவியான இவர், எழுத்தாளர் ஆவார் .(ஐ)




# தொடுதல்!

சுமதி

'மனிதன் தான் உலகின் ஆகப் பெரிய சல்லிப் பயல்' என்கிற புதிய சொலவடை உண்டு. பல சமயங்களிலும் அது உண்மைதானோ என்று தோன்றுவதுண்டு. ஒருவர் மேல்உண்டாகும்அன்போ, பாசமோ அதீதமாகும்பொழுது, அதன் வெளிப்பாடு தொடுதலாகத்தான் இருக்கிறது. அதை வெறும் காமத்துடன் சுருக்கிப் பார்க்கப் பழகிக்கொண்ட மனிதன், உலகின் ஆகப் பெரும் சல்லிப் பயல்தான்.

விஜய் டிவி ஜூனியர் சூப்பர் சிங்கர் பார்க்கும்பொழுது அம்மா சொன்னது, 'அந்தக் குழந்தையைப் பார்க்கும்பொழுதெல்லாம், அதன் கன்னத்தில் முத்தமிட வேண்டும்போல இருக்கிறது.' எனக்கும் அதுபோல பல சமயங்களில் தோன்றியிருக்கிறது.

ஏதோ ஒரு குழந்தையைப் பார்த்து அப்படி ஏன் தோன்ற வேண்டும்? அதன் கொழுகொழு கன்னங்களாக இருக்கலாம் அல்லது துறுதுறு நடவடிக்கை அல்லது சூது அறியாத பால் முகம் ஏதோ ஒரு காரணம். 'முத்தம் கொடுத்துட்டே இருக்காதடி, நோய்த்தொற்று ஆகி விடப்போகிறது' என்று குழந்தையாக இருந்த அத்தை மகளைக் கொஞ்சும்போதெல்லாம் அத்தை கூறுவார். அதனாலேயே எனக்குக் குழந்தைகள் பிறந்தபொழுது, 'இவன் என்னவன். எவ்வளவு வேண்டுமானாலும் கொஞ்சலாம். யாருமே தடுக்க முடியாது' என்று தோன்றியது. எத்தனை லட்சம் முத்தங்கள் கொடுத்திருப்பேன் என்று தெரியாது.

காதல் அரும்பும் தொடக்கத்தில் தொடுதல் என்று இல்லை, காதலன்ஃகாதலியின் மூச்சுக் காற்று மேலே பட்டாலே, மனது படபடக்கும். காலப்போக்கில், அந்தத் தொடுதலால் மனதில் ஏற்படும் பட்டாம்பூச்சி வேண்டுமானால் காணாமல் போகலாம் ஆனால் ஒரு நீண்ட நெடிய நாளைக் கடந்த பிறகு, துணைவரின் தோள் சாய்வதோ மாடி சாய்வதோ என்றுமே அலுப்பதில்லை. அதீத சந்தோஷமோ துக்கமோ, துணைவரின் அரவணைப்பு இல்லாமல் எப்படி அதைக் கடப்பது! 'இவன் என்னவன்', 'இவள் என்னவள்' என்பதை தாலியோ, மோதிரமோவா உலகிற்கு உணர்த்துகிறது? இணையரின் தோளில் போடும் கையோ, கையுடன் கைகோத்துக்கொள்வதோதானே நான் இவனுக்கானவன் என்பதைப் பறைசாற்றுகிறது. காதலின் பிரிவுகூட கடைசி தொடுதலுடன்தானே நிறைவடைகிறது?

'தொட்டு' வழிபட முடியாத கோவிலில் இருக்கும் சாமியைவிட, தான் குளிப்பாட்டி, உடை உடுத்தி, படையல் போடுவதை ஏற்று கொள்ளும் சாமிகள்தானே மக்களிடம் அதிக நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதனால்தானே நம்மை தொட்டு அரவணைக்கும் அனைத்து நெருங்கிய சொந்தங்களின் புகைப்படங்கள் பூஜை அறையில் சாமிகளுடன் சேர்த்து வணங்கப்படுகின்றன?

கடவுள் நம்பிக்கை இருந்த காலத்தில், எட்ட நின்று வழிபட்ட, மிகவும் பிடித்த மயிலாப்பூர் கபாலீஸ்வரர் சாமியைவிட, என்னை கருவறைக்குள் அனுமதித்து, தன் மேல் பாலை ஊற்றவும் அனுமதித்த உஜ்ஜைனி காளீஸ்வரர், மொழி புரியாவிட்டாலும், மிக நெருங்கி வந்தது அந்த ஒரு தொடுதலில்தானே!

சில மாதங்களுக்கு முன் வெளியான நீயா நானா நிகழ்ச்சியில், பெண் குழந்தைகள், தந்தைகள் பங்கு பெற்ற நிகழ்ச்சியில், அதிக பெண்கள், 'அப்பா என்னைத் தொடுவதை குறைத்துக் கொண்டார்' என்று கூறினார்கள். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் அப்பாக்கள் தங்கள் பெண் குழந்தைகளைத் தொடுவதைக் குறைத்துக் கொள்வது யாரும் சொல்லிச் செய்வதில்லை. வயதிற்கு வந்த பெண்ணை அவசியம் இல்லாமல் தொடக்கூடாது என்று நினைக்கும் அப்பாக்கள்தான் தங்கள் மகளுக்கு ஒரு பிரச்சினை என்றால் முன் நிற்பார்கள். எப்போதும் தொடும் உரிமை இருக்கும் அம்மாகூட அதற்கடுத்துதான்.

அப்பா இறந்த சமயத்தில் பல விதங்களிலும் ஆறுதல்கள் வந்து கொண்டிருந்தன. நிறைய நிறைய வார்த்தைகள். ஒன்றுகூட நினைவில் இல்லை. ஆனால் ஒன்றுமே பேசாமல், முகம் முழுக்க சோகத்திலும், லேசான கலங்கிய கண்ணீரிலும், அதுவரை என்னைத் தொட்டிராத ஒரு அண்ணன், என் கைகளைப் பிடித்தபடி என்னை பார்த்தது மட்டும் அப்படியே பதிந்துவிட்டது. அந்தத் தொடுதல் ஆறுதலைக் கொடுத்ததா என்று தெரியவில்லை. ஆனால், 'உன் துக்கத்தில் நானும் பங்கு கொள்கிறேன்' என்பதை அதைவிட சிறப்பாக எப்படி கடத்திவிட முடியும்?

கடைசியாக அப்பாவின் கைகளில் வைத்து எடுக்கப்பட்ட சில சில்லறைக் காசுகளை, தங்கத்தைவிட விலைமதிபாக்கியது அந்த கடைசித் தொடுதல் அல்லாமல் வேறு என்ன? மின்தகனம் செய்யும் கடைசி நிமிடத்திற்கு முன் அப்பாவை ஒருமுறை தொட்டுப் பார்க்கவேண்டும் என்று ஏன் தோன்ற வேண்டும்? வார்த்தைகள் கைகூடாத நேரத்தில், தொடுதல்தானே அனைத்தும்!

சமீப காலங்களில் குழந்தைகளுக்கு பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் (எயகந வழரஉா, ரளெயகந வழரஉா) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமானது.

பள்ளிக் காலங்களில் பிடித்த ஆசிரியரைத் தொடுவதெல்லாம் சாத்தியமற்றது. அப்படி ஒரு பழக்கமே கிடையாது. ஆசிரியர் அடிக்க மட்டுமே கைகள் மேலே படும். வகுப்பு நடைபெறும் சமயம், பள்ளி மர இருக்கைகளுக்கு நடுவே நடந்து செல்லும்போது அவர் சேலை நுனியைத் தொடுவதே பேரின்பம் கொடுக்கும். கன்னம் வலிக்கும் அளவிற்கு கிள்ளி முத்தம் கொடுக்கும்பொழுது அந்த வலியை தாண்டி அதில் இருக்கும் அன்பை மட்டுமே உணர்த்திய தொடுதல் அது.

மருத்துவ காரணங்களுக்காகத் தொடும்பொழுது அதில் எந்த வித உணர்ச்சியுமே கடத்தப்பட்டதில்லை. அவர்களுக்கு அது வெறும் உடல்தான். எதை சோதிக்க மேலே கை வைக்கிறார்களோ, அதில் மட்டுமே அவர்களின் கவனம் இருப்பதால், சில இடங்களில் தொடும்பொழுது கொஞ்சம் அசௌகரியம் ஏற்படுகிறதே தவிர, அதைத் தாண்டிய ஒரு உணர்ச்சி இருந்ததில்லை. அது எதிர் பாலினமாக இருக்கும் பொழுதிலும். சம்பந்தப்பட்ட நபர் ஒரு பயிற்சி பெற்ற நிபுணர், அவர் பணியை அவர் செய்கிறார் என்கிற எண்ணம் மட்டுமே மேலோங்கியிருக்கும்.

தொடுதல்கள் ஒன்றும் வார்த்தைகளைப் போல அவ்வளவு குழப்பமானவையில்லை. தொடுதல்களுக்கு மொழிகள் தேவையில்லை. தொடுதல்களுக்குப் பொய் பேசத் தெரிவதில்லை. தொடுதகள் கொடுக்கும் ஆறுதல்களை வார்த்தைகள் கொடுப்பதில்லை. தொடுதல்கள் கொடுக்கும் எச்சரிக்கைகளை வேறு எந்த அறிவுரைகளும் கொடுப்பதில்லை. தொடுதல்கள் கொடுக்கும் காதலை வேறு எந்த பரிசுப் பொருள்களும் கொடுப்பதில்லை.

**காதல் அரும்பும் தொடக்கத்தில் தொடுதல் என்று இல்லை, காதலன்ஃகாதலியின் மூச்சுக் காற்று மேலே பட்டாலே, மனது படபடக்கும். காலப்போக்கில், அந்தத் தொடுதலால் மனதில் ஏற்படும் பட்டாம்பூச்சி வேண்டுமானால் காணாமல் போகலாம் ஆனால் ஒரு நீண்ட நெடிய நாளைக் கடந்த பிறகு, துணைவரின் தோள் சாய்வதோ மாடி சாய்வதோ என்றுமே அலுப்பதில்லை. அதீத சந்தோஷமோ துக்கமோ, துணைவரின் அரவணைப்பு இல்லாமல் எப்படி அதைக் கடப்பது! 'இவன் என்னவன்', 'இவள் என்னவள்' என்பதை தாலியோ, மோதிரமோவா உலகிற்கு உணர்த்துகிறது? இணையரின் தோளில் போடும் கையோ, கையுடன் கைகோத்துக் கொள்வதோதானே நான் இவனுக் கானவன் என்பதைப் பறைசாற்றுகிறது.**

# எலான் மஸ்க்கிற்கு ஒரு டிரில்லியன் டாலர் சம்பளம் டெஸ்லா வருடாந்திர கூட்டத்தில் ஒப்புதல்

எலான் மஸ்க்கிற்கு ஒரு டிரில்லியன் டாலர் சம்பளம் வழங்க டெஸ்லாவின் வருடாந்திரக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

உலகின் நம்பர் ஒன் பணக்காரரும், டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க், தனக்கு ஒரு டிரில்லியன் டாலர் சம்பளம் வேண்டும் என்று, டெஸ்லா பங்குதாரர்களிடம் கோரிக்கை விடுத்தார். சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால், டெஸ்லாவில் இருந்து விலகுவதாகவும் அவர் கூறியுள்ளார்.



இந்த சூழலில், எலான் மஸ்க்கின் சம்பள விவகாரம் தொடர்பாக ஆலோசனை நடத்த ஆஸ்டின் நகரத்திலுள்ள டெஸ்லா தொழிற்சாலையில் வருடாந்திரக் கூட்டம் நடந்தது. அப்போது, டெஸ்லா நிறுவனத்தில் எலான்மஸ்க்கை வைத்திருப்பது நிறுவனத்தின் எதிர்காலத்திற்கு நல்லது என்றும், வர் வெளியேறினால் நிறுவனத்தின் பங்கு விலை வீழ்ச்சி அடையக்கூடும் என்று டெஸ்லாவின் தலைவர் ராபின் டென்ஹோம் தெரிவித்தார். எனவே, எலான் மஸ்க்கின் சம்பள விவகாரத்திற்கு ஆதரவு அளிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில், அனைவரையும் வியக்கத்தக்க வகையில், எலான் மஸ்க்கிற்கு ஒரு டிரில்லியன் டாலர் சம்பளம் வழங்க அந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஒப்புதல் அளித்தனர். மொத்தம் உள்ள பங்குதாரர்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்த முடிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளனர். இதன்மூலம், எலான் மஸ்க் டெஸ்லா நிறுவனத்தில் மேலும் 7 ஆண்டுகள் சேவையை தொடர்வது உறுதியாகியுள்ளது.

ஏஐ மற்றும் ரோபாட்டிக்ஸ் துறைகளில் கடும் போட்டியான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், மஸ்க்கின் சேவையை டெஸ்லாவில் தொடர்வதை உறுதி செய்யும் விதமாக, இந்த சம்பள உயர்வு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக டெஸ்லா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு குறித்த கோரிக்கைக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக எலான் மஸ்க் கூறினார்.

மஸ்க்சம்பளம்ஆனது, பணமாக வழங்கப்படாது. அடுத்த பத்து ஆண்டுகளுக்கு நிறுவனத்தின் பங்குகளாக வழங்கப்படும். நிறுவனத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 1.5 டிரில்லியன் டாலர்கள் என்ற அளவில் உள்ளது. அதை 8.5 டிரில்லியன் டாலர்கள் ஆக உயர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அரசியல் கருத்துக்களால் டெஸ்லாவின் பங்குகள் கடும் வீழ்ச்சியை சந்தித்து வரும் நிலையில், இதற்காக, எலான் மஸ்க் ஒரு டிரில்லியன் டாலர்களைப் பெற்றுக்கொண்டதாக 'டெஸ்லா டேக்டவுன்' என்ற சமூக ஆர்வலர் குழு விமர்சித்துள்ளது.

ஒரு டிரில்லியன் என்பது ஒரு லட்சம் கோடி.

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் என்பது இந்திய மதிப்பில் 88 லட்சம் கோடி ரூபாய். (ஐ)



# பாகிஸ்தான் - ஆப்கன் எல்லையில் மீண்டும் வெடித்தது மோதல் 5 பேர் பலி

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையில் நடத்தப்பட்ட பரஸ்பர துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள தெஹ்ரிக் - இ - தலிபான் பாகிஸ்தான் எனப்படும் பாகிஸ்தான் தலிபான் பயங்கரவாத அமைப்பினர், பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஆப்கானிஸ்தானில் உள்ள அந்த அமைப்பின் தலைவர்கள் மீது பாகிஸ்தான் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்தது. மாறி மாறி நடத்திக் கொண்ட தாக்குதலில் இதுவரையில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இதையடுத்து, உலக நாடுகளின் தலையீட்டால் தற்காலிக போர் நிறுத்தம் அமலுக்கு வந்தாலும், முழுமையான போர் நிறுத்தம் தொடர்பாக துருக்கியில் இரு தரப்பின் சார்பிலும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே எல்லையைத் தாண்டி பரஸ்பரமாக நடத்தப்பட்ட தாக்குதலில், ஆப்கனைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 4 பெண்கள் உள்பட 6 பேர் பலத்த காயமடைந்தனர். பாகிஸ்தான் தரப்பில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை. இந்தத் தாக்குதலுக்கு இருநாடுகளுக்கு மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றன.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து ஆப்கனின் தலிபான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறியதாவது போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்தான்புல்லில் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில், பாகிஸ்தான் படைகள் ஸ்பின் போல்டாக் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளன.

பேச்சுவார்த்தைக் குழுவை மதித்தும், பொதுமக்கள் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையிலும், முஸ்லிம் அமீரகத்தின் படைகள் இதுவரை எந்த பதிலடியும் கொடுக்கவில்லை, எனக் கூறியிருந்தார். ஆனால், ஆப்கானிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)

# பாக்., ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வலுக்கிறது இளம் தலைமுறையினர் போராட்டம்



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், பாகிஸ்தான் அரசுக்கு எதிராக இளம் தலைமுறையினர் தற்போது போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவுகிறது.

உலகெங்கும் உள்ள இளம் தலைமுறையினர், தங்கள் நாடுகளில் நடந்து வரும் அவலங்களுக்கு எதிராக குரல் கொடுக்க துவங்கியுள்ளனர். நம் அண்டை நாடுகளான வங்கதேசம், நேபாளம், இலங்கையில் இளம் தலைமுறையினர் நடத்திய போராட்டங்கள் அரசை ஆட்டம் காண வைத்ததுடன், ஆளும் முக்கிய தலைவர்களை நாட்டை விட்டே வெளியேற வழி செய்தது.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தான் தற்போது இத்தகைய சூழல் நிலவி வருகிறது. ஏற்கனவே, விலைவாசி உயர்வு, கோதுமைக்கான மானியம், மின்சாரம் உள்ளிட்ட பிரச்னைகள் குறித்து இப்பகுதி மக்கள், அரசுக்கு எதிராக போராட்டங்கள், வன்முறைகள் நிகழ்ந்தன. போராட்டக்காரர்களிடம் அரசு பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து அப்போராட்டங்கள் வாபஸ் பெறப்பட்டு இயல்புநிலை திரும்பியது.

இந்நிலையில், தற்போது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மீண்டும் போராட்டங்கள் வெடித்துள்ளன. தற்போது, அந்நாட்டு அரசுக்கு எதிராக இளம் தலைமுறையினர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மாணவர்களுக்காக சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் மதிப்பீட்டு முறையில், மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய மதிப்பெண்கள் குறைவாக வழங்கப்பட்டதாக புகார் எழுந்தது. எதிர்பாராத அளவுக்கு மதிப்பெண்கள் குறைந்ததையடுத்து, புதிய மதிப்பீட்டு முறையில் குறைபாடு இருப்பதாக கூறி மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். மேலும், முசாபராபாதில் உள்ள முக்கிய பல்கலைக்கழகங்களில் கல்வி கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உயர்வு, தேர்வுகளில் தோல்வி அடைந்த அல்லது குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மறுமதிப்பீடு செய்வதற்கான கட்டணம், ஒரு தாளுக்கு 1,500 ரூபாய் என கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வி கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதியான முறையில் துவங்கப்பட்ட இப்போராட்டம், ஒரு மாணவர் மீது அடையாளம் தெரியாத நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டால் வன்முறையாக மாறியது. ஆத்திரமடைந்த மாணவர்கள் டயர்களை எரித்து பாகிஸ்தான் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். கல்வி கட்டண உயர்வுக்காக துவங்கிய மாணவர்கள் போராட்டம், தற்போது மோசமான உட்கட்டமைப்பு, சுகாதார பராமரிப்பின்மை மற்றும் போக்குவரத்து வசதியின்மை உள்ளிட்ட அடிப்படை நிர்வாக சீர்கேடுகளுக்கு எதிரான போராட்டங்களாக மாணவர்கள் மறுவடிவமைப்பு செய்துள்ளனர்.

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாட்டில் வசித்து வந்த மகன் ஒருவர் சிசிரிவி காணொளிமூலமாக நேரடியாகப்பார்வையிட்டதையடுத்து, உடனடியாக உறவினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், உறவினர்கள் வீட்டுக்குச் சென்று மனைவியை மீட்டு மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

தலையில் ஏற்பட்ட தீவிர காயம் காரணமாக அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் தடயவியல் பொலிஸார் விரிவான சோதனைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்த கணவரின் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உட்பட தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேச்சு நடத்துவதற்கு நேரம் கோரி இருந்தோம். கடந்த மாதம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் அதற்குரிய பதில் ஜனாதிபதி தரப்பில் இருந்து இன்னும் வழங்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சிதான் மூன்றாவது பெரிய கட்சியாகும். அந்தக் கட்சியால் வழங்கப்பட்ட கடிதத்துக்கு ஜனாதிபதி ஒருவர் பதில் வழங்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே, வரவு - செலவுத் திட்டம் பற்றி நாமும் காத்திரமானதொரு முடிவை எடுக்க வேண்டும்.” - என்றார்.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

26 வயதுடைய உதயகுமார் சாருஜன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞரும், அவரது நண்பரும் கொழும்பில் இருந்து ஓட்டோவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், பெரியகுளம் பகுதியில் வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த லொறியுடன் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மற்றைய இளைஞர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2030 ஆம் ஆண்டுக்குள் பொதுக் கடனை 87மூ ஆகக் குறைக்க அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

வருமானம்குறைந்த மக்களுக்கு அஸ்வெசும திட்டத்தை முன்னெடுப்பதுடன், 2026 ஆம் ஆண்டு மீண்டும் அஸ்வெசும பெறுவோரை மீளாய்வு செய்யவுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து, நாட்டுக்கு தேவையான பிரதி பலன்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

அரச நிறுவனங்கள் மற்றும் அரச சேவைகள் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின்சேவைகளை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு ஈ சேவை அறிமுகப்படுத்தப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2026 மார்ச் மாதத்தில் அனைவரும் தங்களுடைய சொத்து விபரங்களை அறிவிக்கும் வகையில் டிஜிட்டல் சேவை அறிமுகப்படுத்தப்படும்

கையூட்டல் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் பொருளதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

2025 ஆம் ஆண்டு 823 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2026 ஆம் ஆண்டு அரச சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் சட்ட மூலத்தை நிறைவேற்றுவோம்.

குற்றங்களை கட்டுப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கும் போது என்னை ஹிட்லர் என்று விமர்ச்சிக்கின்றனர்.

மக்களுக்கு எதிராக யாரேனும் தவறு இழைத்திருந்தால், அவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்திற்கு அமைய தண்டனை வழங்கப்படும். யாருக்கும் பாரபட்சம் பார்க்கப்படாது.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொருளாதார பிரதிபலன்கள் சமமாக கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதே 2026 ஆம் ஆண்டு பாதீட்டின் முக்கிய நோக்கமாகும்.

ஏற்றுமதியை இலக்காக கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்.

2025 ஆம் ஆண்டு 430 மில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானம் பெறப்பட்டுள்ளது.

எவரும் கடனைச் செலுத்துவது தொடர்பில் கவலை கொள்ள தேவையில்லை.

2032 ஆம் ஆண்டு தேசிய உற்பத்திக்கு சமமாகக் கடனை 90 வீதம் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பொய்யான பரப்புரைகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் தேசிய கடன் சேவை 760 மில்லியன் டொலர் அதிகரித்துள்ளது.

2028 ஆம் ஆண்டிலும் நாங்களே ஆட்சியில் இருப்போம். நாங்களே கடனை செலுத்துவோம்.

2026 ஆம் ஆண்டு 15.3 மற்றும் 2027 ஆம் 15.4 வீதங்களில் தேசிய வருமானத்தை முகாமைத்துவம் செய்ய எதிர்பார்த்துள்ளோம். இந்த வருடம் இதுவரை 1373 மில்லியன் டொலர் வரை வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கிராமிய வறுமையை நீக்குவதற்கு தேசிய வருமானத்தின் பிரதிபலன்களை கிராமிய மட்டங்களுக்கு கொண்டுச் செல்ல வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்போம்.

டிஜிட்டல் மயமாக்கலை மேம்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தப்படும். அதற்கு பல்வேறு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை 7 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அரச ஏற்றுமதி 4 சதவீத்தால் அதிகரிப்பதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

வேலையின்மை 4.5 இல் இருந்து 3.8 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அரச வருமானம் 900 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு பங்குச் சந்தைகள் பாரிய வளர்ச்சியை காண்பித்துள்ளன.

அரசியல் தலைவர்கள் தவறுகள் இழைத்தால் மக்களே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நாட்டை உருவாக்கியுள்ளோம்.

அனைவரும் தங்களுடைய ஒவ்வொரு ரூபாய்க்கும் வரி செலுத்தும் சூழலை உருவாக்கியுள்ளோம். அதனாலேயே வரி வருமானம் அதிகரித்துள்ளது.

நேரடி மற்றும் மறைமுக வரி 75 - 25 சதவீதத்தில் இருந்து 40 - 60 சதவீதம் வரை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். மாகாண சபைத் தேர்தல் குறித்து சட்டமா அதிபரின் கருத்துக்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் சர்வதேச முதலீடுகள் இலங்கையில் இருந்து கை நழுவிச் செல்வதை தடுக்க முடியும்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு தேசிய உற்பத்தியை 20 சதவீதமாக முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை.” - என்றார்.

# இஷாரா செவ்வந்தி பின்னணியில் சக்திவாய்ந்த பாதாள குற்றவாளிகள்: நீதிமன்றம் அதிரடி உத்தரவு

*கணேமுல்ல சஞ்சீவவின் கொலையில் ஒன்பது சக்திவாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களில் நான்கு பேர் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளதாகவும் கொழும்பு குற்றப்பிரிவு இன்று (7) கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது. இந்த கொலையில் ஆறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு இன்று கொழும்பு தலைமை நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அந்த பிரிவின் அதிகாரி இதனை தெரிவித்துள்ளார்.*

*இன்றுவழக்குவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளப பட்ட போது, பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து சந்தேகநபர்கள் ஜூம் தொழில்நுட்பம் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டனர்.*

*மேலும், இந்த கொலையின் பிரதான சந்தேகநபர் இஷாரா செவ்வந்தி தப்பிச்செல்வதற்கு உதவியதாக சந்தேகத்தின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று ஆண் மற்றும் இரண்டு பெண் சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டனர். இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் அறிக்கையை கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பல சந்தேகநபர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு, அவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் மேலும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார். 09 சக்திவாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள்*

*இந்த கொலைத்திட்டத்தை செயல்படுத்துவதில் 09 சக்திவாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களில் 04 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், காவலில் உள்ள சந்தேகநபர்கள் அதிகாரியால் கண்காணிக்கப்படுவார்கள் என்றும், சந்தேகநபர்கள் மீதான விசாரணைகளின் முன்னேற்றம் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கும், கொழும்பு நீதவான் நீதிமன்ற எண் 08க்கும் தெரிவிக்கப்படும் என்றும் கோட்டை நீதவான் தெரிவித்தார். மேலும், முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட நீதவான், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். மேலும், வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்துமாறு பொலிஸாருக்கு நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.*

# வெள்ளத்தில் மிதந்த பருத்தித்துறை மரக்கறி சந்தை! தவிசாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள்



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை மரக்கறி சந்தை வெள்ளத்தில் மிதந்துள்ளது.

இதையடுத்து கழிவகற்றல் வாகனத்தின் மூலம் நகரசபை தரப்பில் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது.

நகரசபை தவிசாளர் வின்சென்ட் போல் டக்ளஸ் போல் சந்தையை பார்வையிட்டார்.

இதன்போது வர்த்தகர்கள் தவிசாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட காலமாக இருக்கும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமை தொடர்பில் தவிசாளரிடம் அதிருப்தி தெரிவித்தனர்.

தொடர்ந்து மழை நீடிக்கும்பட்சத்தில் மரக்கறி சந்தை வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக நவீன சந்தை கட்டடத்திற்கு கொண்டு செல்வது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுப்பதாக வியாபாரிகளிடம் தவிசாளர் உறுதிபடத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2025 வெளியிடப்பெற்றது.